# இயேசு யார்?

(பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படைச் சத்தியங்கள்)

### ஆசிரியர் உரை

## இயேசு யார்?

இயேசு யார் என்று அறிய விரும்பி இப்புத்தகத்தை வாசிக்கத் துவங்கும் யாவருக்கும் அன்பின் வாழ்த்துதல்கள். தபால் மூலம் இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிய விரும்புகிறவர்களுக்காக, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை யாவருக்கும் தெளிவாகப் புரியும்படி பத்துப் பாடங்களாக எழுதித் தரும்படி ஒரு ஊழிய நிறுவனத்தினர் கேட்டுக்கொண்டனர். கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவரின் உதவியால் அவர்களுக்காக எழுதிய பத்துப் பாடங்களே இப்புத்தகமாயின.

எழுதவேண்டிய சத்தியங்களோ மிகவும் விஸ்தாரமானவை. அவற்றில் முன்னுரிமைகொடுத்து அறியவேண்டியவை என்று கர்த்தர் எனக்கு உணர்த்தியவைகளை மட்டும் எழுதியிருக்கிறேன். இவற்றைத் துவக்கமாகக் கொண்டு சத்தியத்தை விளங்கிக்கொள்ளவும், விசுவாசிக்கவும் கர்த்தர் கிருபை செய்வாராக!

இப்புத்தகம் இயேசுவைக்குறித்து முதன்முறையாக அறியவிரும்புகிறவர்களுக்கும், ஏற்கனவே அறிந்து தாங்கள் அறிந்தவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புகிறவர்களுக்கும் உதவியாக இருக்க வேண்டுமென்று தேவனை வேண்டிக்கொள்கிறேன். பரிசுத்த வேதாகமம் என்னும் மிகப்பெரிய சத்தியமான நூலின் மகத்துவங்களை இப்புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொருவரும் உணர்ந்து அதனை வாசிக்க வேண்டும் என்பது என் விருப்பம்.

இப்புத்தகத்தை ஏற்கனவே அச்சிட்டு வெளியிட்ட திரு சாலொமோன்ராஜ், நேசமணி நகர், நாகர்கோவில் அவர்களுக்கும், InterNet -ல் வெளியிட்ட திரு நகுலேஸ், கனடா அவர்களுக்கும் கர்த்தர் பெரிதான கிருபைகளைக் கட்டளையிடுவாராக.

இந்த நூலை இன்னும் மேம்படுத்த சத்தியத்தை அறிந்து, ஆத்ம தாகமுள்ள விசுவாசிகளின் ஆலோசனைகளை வரவேற்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில் அன்புடன்,

ஜே.கே.ஜேசுதாஸ் செல்லத்துரை

அஞ்சல் முகவரி: **J.K.JESUDOSS CHELLADURAI**
**604 Third Building,**
**Shanthi Park Appartments**
**Jayanagar 9 th Block**
**Bangalore -69**
**India**
மின்னஞ்சல் முகவரி: **jkjesudoss@yahoo.com**

copyright TAMILCHRISTIAN.COM All rights reserved.